2008 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினால் நடந்து வருவதையும், அதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தொடர்ந்து எடுத்து வருகின்ற நடவடிக்கைகள்மூலமாக அவர்கள் உடனுக்குடன் விடுவிக்கப்படுவதும் இந்த அவை அறிந்த ஒன்று.

கடந்த 12 நாட்களுக்கு முன்னால் தங்கச்சிமடம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்கள், இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, நண்டு பிடிக்கச் சென்றவர்கள், காணாமல் போயிருக்கின்றார்கள். அவர்களைத் தேடுகின்ற பணி நம்முடைய இந்திய கடற்படையினரால் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.